முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1099

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. பிரணவக் குடில்படைத்த குருராஜா
   பிரணவ சித்திமிகு தவராஜா
   சரவண சுடரேற்றி உலகைக்காக்க
   சற்குருவாய் விளங்குகின்ற ஆறுமுகஅரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 15ம் நாள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை)
   வரமென அரங்கன் ஞானஉபதேசமே
   வையகத்தை ஞானலோகமாக மாற்றக்கூடும்
3. கூடவே அரங்கனுள் யானிருந்து
   குறையில்லா அற்புதத்தை நடத்திவர
   நாடெங்கிலும் ஞானஆட்சி மலர
   ஞானிகள் மக்கள்வழி வெளிப்பட்டு உலகமெங்கும்
4. உலகமெங்கும் அற்புதங்கள் நடக்க
   நாட்டிடுவேன் உலகோர் அரங்கன் திருவடிபற்றி
   பற்றியே சன்மார்க்க வழியேற்று
   பழுதில்லா அரங்கன் தர்மபாதையை
5. ஐயமற பின்பற்றி தொடர்ந்து வந்து
   அகிலமெங்கும் தர்மம் பரப்ப
   ஆற்றல்பட உலகமே ஞானஆட்சி காலமாக மாறி
   ஆளுமைகளும் ஞானிகள் ஆட்சியாக கூடும்
6. கூடுமே இந்த பேருலகம்
   குருஅரங்கன் வழிகாட்டல்
   ஈடேற்றம் ஆறுமுகன் என் தலைமை கொண்ட
   இயம்பிடுவேன் ஏழ்மையை விரட்டி உலகை காக்கின்ற
7. காக்கின்ற அற்புதம் மிக்க
   ஞான ஆட்சிக்காலமாக மாறும்
   கருணை கொண்ட ஆளுமைகளாக நிரம்பி
   வானவர்கள் மெச்ச வையகமே மேல்நிலை காணக்கூடும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–